
# குதிரை லாடம்

▸▸ ஜி.எஸ். மோகன் விஸ்வநாதன் Cell : 93817 80470



**நமது பாபாஜி இதழில் ஜுன் மாதம் 2016ல் குதிரை லாடம் அதிர்ஷ்டம் அளிக்குமா? என்ற தலைப்பில் திரு. ஜி.எஸ். மோகன் விஸ்வநாதன் அவர்களின் கட்டுரை இடம்பெற்றதை அறிவோம். நிறைய வாசக அன்பர்கள் இந்த கட்டுரையை படித்துப் பாராட்டி உள்ளனர். தவிர நிறைய சந்தேகங்களையும் கேட்டு, இதனால் மேற் கொண்டு என்னவெல்லாம் பலன் அளிக்கும் என்பதையும் கேட்டுள்ளனர். சிலர் இந்த குதிரை லாடம் வாஸ்துவுக் கும், பெங்சூயீக்கும் நன்மை சேர்க்குமா என்பதையும் கேட்டுள்ளனர். குதிரை லாடம் மூலம் நமக்கெல்லாம் நன்மைகள் செய்யும் விதத்தை இனி பார்ப்போம்.**

கட்டிடங்களில் குதிரை லாடத்தின் பயன்பாடுகள் நல்ல அதிர்ஷ்டம் தரும் அற்புத மந்திர சக்திகளை அளிக்கும் வல்லமை கொண்டது.



1. கட்டிடத்தின் பிரதான வாயில் கதவுக்கு மேல் குதிரை லாடம் இருந்தால் அதிர்ஷ்டத்தை அளித்து தீய சக்திகளை விரட்டும்.

2. தெருகுத்து உள்ள இடத்தில் கட்டிடங்களில் குதிரை லாடம் இருந்தால் அதை நிவர்த்தி செய்யும்.

3. நமது வீட்டில் "L'' வடிவில் உள்கட்ட அமைப்பு நீண்டு இருந்தால் அதன் எதிர் புறம் குதிரை லாடத்தை மாட்டினால் "L'' வடிவின் தாக்கம் குறைந்து படிப்படியாக முன்னேற்றங்களை காணலாம்.

4. கழிப்பறை, குளியலறை ஒரு வீட்டில் தவறாக இருந்தால் அதன் வாயில் எதிர்புறம் குதிரை லாடம் இருந்தால் அதன் தாக்கங்கள் குறையும்.

5. சமையலறை திசை மாறி இருந்தால் சமையலறை பக்கவாட்டில் குதிரை லாடம் இருக்க மிகவும் நன்றாக இருக்கும்.

6. சிலருடைய படுக்கை அறையில் தூக்கம் இல்லாமல் இருக்கலாம். படுக்கை அறையின் நுழைவாயில் மேல் குதிரை லாடம் அல்லது குதிரை லாடம் போல் உள்ள பச்சை மற்றும் நீலநிறம் கொண்ட வரைபடம் அல்லது குதிரை லாடம் போன்று வரையப்பட்ட திரை சீலைகள் இருந்தால் நிம்மதியான உறக்கம், நல்ல ஆரோக்கியம் இருக்கும்.


7. சில கட்டிடங்களில் வாயில்புற பக்கவாட்டிலோ, எதிர்புறமோ மாடிப்படிகளின் திசை தவறாக இருந்தாலோ வாயிற்புறம் பக்கவாட்டில், அல்லது மாடிப்படிகளின் பக்கவாட்டின் விளிம்பில் குதிரைலாடத்தை மாட்டினால் நல்ல பலன்களை தரும்.




## ரீட்சம் அளிக்கும்...

## இடிக்க, உடைக்க வேண்டாம்!

8. சில கட்டிடங்கள் மேம்பாலம் கீழ் அல்லது கட்டிடங்களின் எதிர்புறம் பில்லர் அல்லது டிரான்ஸ்பார்மர் மற்றவை எது இருந்தாலும் கட்டிடத்தின் மேல் குதிரை லாடம் பதித்தால் அவைகளின் கஷ்டங்கள் நம்மை பாதிக்காது.





9. மாணவ மாணவிகள் படிக்கும் அறையில், புத்தக அலமாரியில் குதிரை லாடம் இருக்க அவர்களுக்கு படிப்பில் நல்ல ஆர்வத்தை கொடுக்கும். ஹயகிரீவர் படம் இருந்தால் மிகவும் நல்லது.


ஏனெனில், மகாவிஷ்ணு குதிரை முகம் உள்ள ஹயகிரீவர் வேதங்களை போதித்து கல்வி அறிவையும் லஷ்மி கடாட்சத்தையும் அளிக்க வல்லவர் என்பதை நாம் அனைவரும் அறிவோம். கல்வி அறிவை அளிப்பதுடன் மிகப் பெரிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுபவர்களின் மேஜையில் குதிரைலாடம் இருக்க அவர்களின அதி நுட்ப அறிவு பல மடங்கு பெருகும்.

10. வியாபார ஸ்தலங்களில் குதிரை லாடம் இருக்க நல்ல வியாபாரமும், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் பெருகும். குதிரை லாடம் கல்லாபெட்டியின் அருகிலோ அல்லது தகுந்த திசையில் இருக்க அற்புதமான ஈர்ப்புசக்திகளைக் கொடுக்கும். பணியாளர்கள் மனநிறைவோடு வேலைகளை செய்வார்கள்.

11. நாம் உடற்பயிற்சி செய்யும் இடத்தில் குதிரை லாடம் இருக்க ஆக்கத்திறன், செயல்திறன் கூடும்.

குதிரை லாடத்தை பதிக்கவோ அல்லது மாட்டவோ தக்க திசைகளை அறிந்து மந்திர உச்சாடனம் செய்து மாட்டினால் நல்ல பலன்களைத் தரும்.

மகாராஷ்ட்ர மாநிலத்தில் நமக்கெல்லாம் உலகமே நன்கு அறிந்த சகல அருள்களையும், வளங்களையும், ஐஸ்வர்யங்களையும், ஆரோக்கியத்தையும், ஆயுளையும் எல்லார்க்கும் வழங்கும் ஷீரடி சாயி பாபாவை அறிவர். ஷீரடி சாயி பாபா கோவிலுக்கு செல்லும் வழியில் சனி பகவானுடைய கோவில் சிக்னாபூரில் உள்ளது. இந்த கோவிலின் முன்பு நிறைய பண்டிதர்கள் பக்தர்களுக்கு பூஜை செய்யும் முன் அர்ச்சனை தட்டில் குதிரை லாடமும் இடம்பெறுவது பாரம்பரிய வழக்கம். பண்டிதர்கள் பக்தர்களுக்கு, பக்தர்களின் கைகளாலேயே பூஜை செய்யச் சொல்வார்கள். பிறகு குதிரை லாடத்தை நமது இல்லங்களுக்கு எடுத்து போய் மாட்ட சொல்வார்கள்.





சனி சிக்னாபூரில் பூஜை பொருளுடன் குதிரை லாடம் வழங்கும் முறை ஆதிகாலத்தில் இருந்து தொன்று தொட்டு வரும் பழக்க முறையாகும். மகாராஷ்டிர மாநிலத்தில் பெரும்பாலான கட்டிடங்களில் குதிரை லாடத்தை காணலாம்.

குதிரை லாடத்தை பிரேம் போட்டோ, பிரேம் போடாமலோ உபயோகிக்கலாம். நமது கட்டிடங்களின் முன்போ, உட்புறமோ குதிரை பொம்மைகள், வரைபடங்கள் இருந்தால் ஐஸ்வர்யங்கள், பல மடங்கு பெருகும். குதிரை லாடத்தை கட்டிடங்களில் பயன்படுத்தும்போது தேவையற்ற இடிபாடுகளையும் , குறைகளையும் தவிர்க்கலாம். இதன்மூலம் குதிரைலாடம் வாஸ்துவுக்கும் பெங்சூயீக்கும் பலம் சேர்த்து பல வளங்களையும், நன்மைகளையும் அளிக்கிறது.

குதிரை லாடத்தைப் பற்றியும், குதிரைகளின் வரைபடங்களைப் பற்றியும் எனது 25 வருட ஆராய்ச்சியில் பல அற்புத நன்மைகளை அளிக்க வல்ல அமானுஷ்ய சக்திகளைக் கொண்டது என்பதை அறிந்தேன். இது கடவுளால் படைக்கப்பட்ட அபூர்வ அமானுஷ்ய சக்திகளைக் கொண்டது என்பதை உணர்ந்தேன்.

மேலும் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள குதிரை லாடத்தின் பங்களிப்பை வரும் இதழ்களில் காண்போம்.